# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No.35/2025

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 24- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 05-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 05 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | கிருஷ்ணன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ராமசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | டோபி காலனி | வயது | - | 59/2026 |
| சாதி | - | | | | |

<u>24-03-2026</u>

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜரில்லை)**

(3-ம் எதிரி தரப்பில் BNSS பிரிவு 355-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வால்பாறையில் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ராஜேஸ்பிரிபு என்பவரை தெரியாது. வழக்கின் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. கடந்த 10.06.2025-ம் தேதி காலை 11.15 மணியளவில் முடீஸ் காவல் நிலைய உதவி ஆய்வாளர் (வால்பாறை பொறுப்பு) குற்ற எண்.63/2025 வழக்கு தொடர்பாக சம்பவயிடமான வால்பாறை புது பஸ் ஸ்டாண்ட் அருகில் ஜெனி ஒர்க் ஷாப் அருகே சம்பவயிடத்தை பார்வையிட்டுக் கொண்டிருந்த போது நானும், சாகுல்அமித் என்பவரும் அங்கு நின்று கொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. உதவி ஆய்வாளர் எங்கள் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் 12.30 மணிக்கு போலீசார் எங்கள் முன்பாக கைக்கு அடக்கமான கல் ஒன்றை சம்பவயிடத்திலிருந்து கைப்பற்றினார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், சாகுல்அமித் என்பவரும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u> இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A.,B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.35/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 24- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 06-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 06 | தொழில் | - | மளிகை கடை |
| பெயர் | - | தாமஸ் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | அகஸ்டீன் | சமயம் | - | |
| கிராமம் | - | எம்.ஜீ.ஆர் நகர் | வயது | - | 66/2026 |
| சாதி | - | | | | |

**<u>24-03-2026</u>**

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜரில்லை)**

(3-ம் எதிரி தரப்பில் BNSS பிரிவு 355-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை</u>:**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து முடீஸில் மளிகை கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 ராஜேஸ்பிரபு என்பவரை தெரியாது. வழக்கின் எதிரிகள் சஞ்சய் மற்றும் சிவசக்கி என்பவர்களை தெரியும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

1. கடந்த 10.06.2025-ம் தேதி 14.45 மணியளவில் முடீஸ் காவல் நிலைய உதவி ஆய்வாளர் (வால்பாறை பொறுப்பு) குற்ற எண்.63/2025 வழக்கு தொடர்பாக இவ்வழக்கின் எதிரி சஞ்சய்

என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட Yamaha கருப்பு நிற இருசக்கர வாகனத்தை என் முன்பாகவும், கிருஷ்ணமூர்த்தி என்பவரின் முன்பாகவும் மகஜரில் கைப்பற்றினார் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், கிருஷ்ணமூர்த்தி என்பவரும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>: இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A.,B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.